## மஹியங்கனை பிரதேச சபை

## பதுளை மாவட்டம்

---------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 25 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜூலை 10 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

----------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர்த்து, மஹியங்கனை பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

------------------------------------------

(அ) உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சின் ஏற்பாடுகளின் கீழ் மஹியங்கனை பிரதேச சபைக்கு பெற்றுக் கொடுத்துள்ள ஒன்று ரூபா 26,500 வீதம் 10 நடமாடும் கடைகளின் பெறுமதி ரூபா 265,000 இனை கணக்கீடு செய்யாமையினால் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலையான சொத்துக்களின் பெறுமதி மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தின் பங்களிப்பு கணக்கின் மீதி ரூபா 265,000 வீதம் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாடுகளின் கீழ் பொது மக்களின் பயன்பாட்டுக்காக சபை வழங்கியிருந்த 277 கல்வனயிஸ் கொடித் தூண்களின் பெறுமதி ரூபா 273,820 இனை மூலதனப்படுத்தாமையால் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலையான சொத்துக்களின் பெறுமதி மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தின் பங்களிப்பு கணக்கின் மீதி ரூபா 273,820 வீதம் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(இ) இலக்கம் 53–5069 கொண்ட கப் வண்டியின் விற்பனவு தொடர்பாக மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஊவா மாகாண அமைச்சில் இருந்து கிடைக்க வேண்டிய ரூபா 712,000 இற்கான தொகையில் வருமானம் முற்பெறுவனவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான மிகை ரூபா 712,000

இனால் குறைவாகவும், வருமான முற்பெறுவனவு அதே தொகையால் மிகையாகவும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து மழைநீர் அகற்றுதல் செயற்திட்டத்திற்காக பெற்றிருந்த கடன் தொகையின் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கடன் மீதி ரூபா 2,756,855 தொகையினை கணக்கீடு செய்யப்படாமையால் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நடைமுறை அல்லாத பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 2,756,855 இனால் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-----------------------------------------------------------------------------------

கணக்கு விடயம் ஒன்று தொடர்பாக துணைப்பதிவேடுகளின் பிரகாரம் மீதி 4,918,362 ஆக காணப்பட்டதுடன், கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதி ரூபா 2,300,784 ஆகும். இதன் பிரகாரம் ரூபா 2,617,578 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---------------------------------------------------------------------------------------

சமர்பித்திருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு டிசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 20,002,146 ஆக காணப்பட்டதுடன், அத்திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 11,519,096 ஆகும்.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

----------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 6,592,973 இற்கான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமான சான்றுறுதி செய்ய முடியாதுள்ளது.

1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

-----------------------------------------------------------------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு,

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 132 | உள்ளுராட்சி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் பூர்வாங்க அங்கீகாரம் இன்றி தனி நபர்களுக்கு, சனசமூக அடிப்படை அமைப்புக்களுக்கு மற்றும் சமய வணக்கஸ்தளங்களுக்கு பண்ட உதவிகள் வழங்குவதற்காக 21 சந்தர்ப்பங்களில் ரூபா 547,264 தொகை ஒன்று செலவிடப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் நி.பி. 571 | வைப்புச் செய்து 02 வருடங்களுக்குள் உரிமை கோரப்படாத ரூபா 64,570 பெறுமதியான 10 வைப்புக்களை உரிமையளிப்பு செய்திருக்கவில்லை. |

| | |
|---|---|
| (இ) இலங்கை குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாயம் XXIV பிரிவுகள் 1:6 மற்றும் 4 | சபையில் கடமையாற்றிவிட்டு சேவையை விட்டுச் சென்றுள்ள இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள 16 அலுவலர்கள் / ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 33,711 இற்கான பதவியணிக் கடனை அறவீடு செய்திருக்கவில்லை. |

2 நிதி மீளாய்வு

--------------------

2.1 நிதி விளைவுகள்

---------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,411,275 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 288,212 ஆகும். இதன் பிரகாரம் ரூபா 5,699,487 இற்கான அனுகூலமான முரண் ஒன்று அவதானிக்கப்பட்டது.

2.2 வருமான நிருவாகம்

------------------------------

2.2.1 வீதவரி

-----------

ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை வீதவரி திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் வரி அறவீடு செய்யப்பட வேண்டும் எனினும் மீளாய்வாண்டிற்காகவும் 2001 ஆண்டிற்கான பெறுமதி மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு வீதவரி அறவிடப்பட்டிருந்தது.

2.2.2 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-------------------------------------------------------------------------------------

மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டண வருமானம் பின்வருமாறு,

| | ரூபா |
|---|---|
| நீதி மன்றத் தண்டப் பணம் | 1,345,752 |
| முத்திரை கட்டணம் | 2,686,823 |
| | -------------- |
| | 4,032,575 |
| | ======= |

3 செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------

3.1 முகாமைத்துவ திறமையின்மை

-----------------------------------------------

இலக்கம் 53 – 5069 கப் வண்டி விற்பனவு தொடர்பான ரூபா 712,000 தொகை ஒன்று ஊவா உள்ளூராட்சி அமைச்சில் இருந்து மீளளிப்புச் செய்திருக்கவில்லை.

3.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்

---------------------------------------------------------------------------------------------

(அ) 12.5 KVA இயலளவு கொண்ட Mack Power மின் பிறப்பாக்கி செயற்படாமையால் அதனை திருத்தங்கள் மேற்கொண்டு பயன்படுத்தாமல் களஞ்சிய வளவில் காணப்பட்டது.

(ஆ) இலக்கம் 37 – 7490 கொண்ட டிரக்டர் வண்டியை பயன்படுத்தாமல் சபை வளவில் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

3.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்

--------------------------------------------

ரூபா 20,758 பெறுமதியான சுமார் 21 கல்வனயிஸ் கொடித் கம்பங்கள் காணாமல் போயுள்ளன.

4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) களஞ்சியக் கட்டுப்பாடு